# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1928 - 2015 අගෝස්තු මස 14 වැනි සිකුරාදා - 2015.08.14

*1928 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 574 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 579 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, ஓகத்து மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# அரசாங்க அறிவித்தல்கள்

பதிவு செய்தல் ஆ 97 (F2) 2/64.

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

திருமணத்தினை நிறைவேற்றுவதற்காக தேவாலயங்களை பதிவு செய்தல்

விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (112 ஆம் அத்தியாயம்) 10 ஆம் பிரிவின் ஒழுங்குவிதிகளுக்கிணங்க பதிவாளர் நாயகம் ஏக்கநாயக்க முதியன்சேலாகே குணசேகர ஆகிய நான், பிரசித்த கிறிஸ்தவ தேவாலயமாக உபயோகிக்கப்படும் பின்வரும் கட்டிடம் திருமணத்தினை நிறைவேற்றுவதற்காக முறைப்படி பதிவு செய்யப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கிறேன்.

| இலக்கம் | பதிவு செய்யப் பட்ட திகதி | விபரம் | அமைவிடம் | மதகுரு, உரிமையாளர் அல்லது பொறுப்பாளர் | கட்டிடம் பதிவு செய்யப்பட்டது எந்த மதத்திற்காக |
|---|---|---|---|---|---|
| 1455 | 2015.05.12 | அசெம்பிளி ஒப் கோட் தேவாலயம் | இல. 6/3, மஹசென் மாவத்தை, 28 ஆவது கட்டை பொலன்னறுவை | வணக்கத்துக்குரிய பிதா உதயசிறி செனரத் | அசெம்ளி ஒப் கோட் சிலோன் (1947 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க பாராளு மன்றச் சட்டம்) |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, யூலை 22.

8-351/1

---

பதிவு செய்தல் ஆ 96 (F2) 2/64.

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

கட்டிட பதிவுச் சான்றிதழ்

சான்றிதழ் இல. 1455

விவாகம் பதிவு செய்தற் கட்டளைச் சட்டத்தின் (112 ஆம் அத்தியாயம்) 10 ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் வேண்டுகோள் மற்றும் பிரதிக்கினைக்கிணங்க ஏக்கநாயக்க முதியன்சேலாகே குணசேகர ஆகிய நான், பிரசித்த தேவாலயமாக உபயோகிக்கப்படும் கீழ் விபரிக்கப்படும் கட்டிடம் விவாகத்தினை நிகழ்த்துவதற்காக முறையான விதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

| விபரம் | அமைவிடம் கிராமம் அல்லது வீதி மற்றும் நகர பிரிவு | பற்று,கோறளை அல்லது மாவட்டத்தின் வேறு பிரிவு | மாவட்டம் | மதகுரு, உரிமையாளர் அல்லது பொறுப்பாளர் | கட்டிடம் பதிவு செய்யப்பட்டது எந்த மதத்திற்காக |
|---|---|---|---|---|---|
| அசெம்பிளி ஒப் கோட் தேவாலயம் | இல. 6/3, மஹசென் மாவத்தை, இல. 28 ஆவது கட்டை பொலநறுவை | தமன்கடுவை | பொலநறுவை | வணக்கத்துக் குரிய பிதா உதயசிறி செனரத் | அசெம்ளி ஒப் கோட் சிலோன் (1947 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க பாராளு மன்றச் சட்டம்) |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, யூலை 22.

8-351/ 2

பதிவு செய்தல் ஆ 97 (F2) 2/64.

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

திருமணத்தினை நிறைவேற்றுவதற்காக தேவாலயங்களை பதிவு செய்தல்

விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (112 ஆம் அத்தியாயம்) 10 ஆம் பிரிவின் ஒழுங்குவிதிகளுக்கிணங்க பதிவாளர் நாயகம் ஏக்கநாயக்க முதியன்சேலாகே குணசேகர ஆகிய நான், பிரசித்த கிறிஸ்தவ தேவாலயமாக உபயோகிக்கப்படும் பின்வரும் கட்டிடம் திருமணத்தினை நிறைவேற்றுவதற்காக முறைப்படி பதிவு செய்யப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கிறேன்.

| இலக்கம் | பதிவு செய்யப் பட்ட திகதி | விபரம் | அமைவிடம் | மதகுரு, உரிமையாளர் அல்லது பொறுப்பாளர் | கட்டிடம் பதிவு செய்யப்பட்டது எந்த மதத்திற்காக |
|---|---|---|---|---|---|
| 1457 | 2015.06.10 | அசெம்பிளி ஒப் கோட் தேவாலயம் | தவலன்தென்ன கொத்மலை | வணக்கத்துக்குரிய பிதா எல். கணேஷன் | அசெம்ளி ஒப் கோட் சிலோன் (1947 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க பாராளு மன்றச் சட்டம்) |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, யூலை 27.

8-352/1

---

பதிவு செய்தல் ஆ 96 (F2) 2/64.

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

கட்டிட பதிவுச் சான்றிதழ்

சான்றிதழ் இல. 1456

விவாகம் பதிவு செய்தற் கட்டளைச் சட்டத்தின் (112 ஆம் அத்தியாயம்) 10 ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் வேண்டுகோள் மற்றும் பிரதிக்கினைக்கிணங்க ஏக்கநாயக்க முதியன்சேலாகே குணசேகர ஆகிய நான், பிரசித்த தேவாலயமாக உபயோகிக்கப்படும் கீழ் விபரிக்கப்படும் கட்டிடம் விவாகத்தினை நிகழ்த்துவதற்காக முறையான விதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

| விபரம் | அமைவிடம் கிராமம் அல்லது வீதி மற்றும் நகர பிரிவு | பற்று,கோறளை அல்லது மாவட்டத்தின் வேறு பிரிவு | மாவட்டம் | மதகுரு, உரிமையாளர் அல்லது பொறுப்பாளர் | கட்டிடம் பதிவு செய்யப்பட்டது எந்த மதத்திற்காக |
|---|---|---|---|---|---|
| அசெம்பிளி ஒப் கோட் தேவாலயம் | இல. 131, தவலன்தென்ன கொத்மலை | கொத்மலை | நுவரெலியா | வணக்கத்துக் குரிய பிதா எஸ். கணேஷன் | அசெம்ளி ஒப் கோட் சிலோன் (1947 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க பாராளு மன்றச் சட்டம்) |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, யூலை 27.

8-352/ 2

பதிவு செய்தல் ஆ 97 (F2) 2/64.

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

*திருமணத்தினை நிறைவேற்றுவதற்காக தேவாலயங்களை பதிவு செய்தல்*

விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (112 ஆம் அத்தியாயம்) 10 ஆம் பிரிவின் ஒழுங்குவிதிகளுக்கிணங்க பதிவாளர் நாயகம் ஏக்கநாயக்க முதியன்சேலாகே குணசேகர ஆகிய நான், பிரசித்த கிறிஸ்தவ தேவாலயமாக உபயோகிக்கப்படும் பின்வரும் கட்டிடம் திருமணத்தினை நிறைவேற்றுவதற்காக முறைப்படி பதிவு செய்யப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கிறேன்.

| இலக்கம் | பதிவு செய்யப் பட்ட திகதி | விபரம் | அமைவிடம் | மதகுரு, உரிமையாளர் அல்லது பொறுப்பாளர் | கட்டிடம் பதிவு செய்யப்பட்டது எந்த மதத்திற்காக |
|---|---|---|---|---|---|
| 1456 | 2015.06.10 | அசெம்பிளி ஒப் கோட் தேவாலயம் | லபுக்கல்ல, கொண்டகல பிரிவு, கண்டி வீதி, நுவரெலியா | வணக்கத்துக்குரிய பிதா பி. கனகராஜன் | அசெம்ளி ஒப் கோட் சிலோன் (1947 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க பாராளு மன்றச் சட்டம்) |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, யூலை 27.

8-354/1

---

பதிவு செய்தல் ஆ 96 (F2) 2/64.

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

*கட்டிட பதிவுச் சான்றிதழ்*

சான்றிதழ் இல. 1456

விவாகம் பதிவு செய்தற் கட்டளைச் சட்டத்தின் (112 ஆம் அத்தியாயம்) 10 ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் வேண்டுகோள் மற்றும் பிரதிக்கினைக்கிணங்க ஏக்கநாயக்க முதியன்சேலாகே குணசேகர ஆகிய நான், பிரசித்த தேவாலயமாக உபயோகிக்கப்படும் கீழ் விபரிக்கப்படும் கட்டிடம் விவாகத்தினை நிகழ்த்துவதற்காக முறையான விதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

| விபரம் | அமைவிடம் கிராமம் அல்லது வீதி மற்றும் நகர பிரிவு | பற்று,கோறளை அல்லது மாவட்டத்தின் வேறு பிரிவு | மாவட்டம் | மதகுரு, உரிமையாளர் அல்லது பொறுப்பாளர் | கட்டிடம் பதிவு செய்யப்பட்டது எந்த மதத்திற்காக |
|---|---|---|---|---|---|
| அசெம்பிளி ஒப் கோட் தேவாலயம் | லபுக்கல்ல, கொண்டகல பிரிவு, கண்டி வீதி, நுவரெலியா | கொத்மலை | நுவரெலியா | வணக்கத்துக் குரிய பிதா பி. கனகராஜன் | அசெம்ளி ஒப் கோட் சிலோன் (1947 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க பாராளு மன்றச் சட்டம்) |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, யூலை 27.

8-354/ 2

## காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் (120 ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்

கீழ்க் குறிப்பிட்ட அட்டவணையில் காணப்படும் II ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் I ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமான III ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2015.08.07 தொடக்கம் 2015.08.21 வரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு தெல்கந்த காணிப் பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமான எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்து மூலம் 2015.08.28 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

### அட்டவணை

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் சிதைவடைந்த ஏடுகள் பற்றிய விபரங்கள் | காணியின் விபரம் | பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரங்கள் |
| 1. கொழும்பு மாவட்டத்தின் தெல்கந்தை காணிப் பதிவகத்தில் M பிரிவின் 1298 ஆவது புத்தககத்தின் 262 ஆவது ஏடு. | மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தின் பல்லேபற்று சல்பிட்டி கோறளையில் பெலன்வத்தையில் அமைந்துள்ள "மஹயாய அல்லது மஹயாய ஹேனபிம" என்னும் இடத்திற்கு திரு. டி. ஜே. நாணயக்கார நில அளவையாளரினால் 1981.04.08 ஆந் திகதி அளவிட்டு தயாரிக்கப்பட்ட இலக்கம் 2374 உடைய அளவீட்டின் பிரகாரம் லொட் 109 இற்கான எல்லைகள் :-<br><br>வடக்கு : லொட் 11;<br>கிழக்கு : லொட் ஜி (20 அடி அகலப் பாதை) ;<br>தெற்கு : லொட் 108 ;<br>மேற்கு : லொட் 94.<br><br>விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 12பே. | 1. எம். பீ. விஜயமான்ன பி. நொ.ஆல் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 1992.10.01 ஆந் திகதிய 9123 ஆம் இலக்கமுடைய அறுதி உறுதி.<br><br>2. கே. கலுஆரச்சி பி. நொ. ஆல் எழுதி உறுதிப் படுத்தப்பட்ட 1992.10.05 ஆந் திகதிய 389 ஆம் இலக்கமுடைய ஈட்டு உறுதி.<br><br>3. கே. பலியக்கார பி. நொ. ஆல் எழுதி உறுதிப் படுத்தப்பட்ட 1995.07.03 ஆந் திகதிய 1817 ஆம் இலக்கமுடைய ஈட்டு உறுதி.<br><br>4. கே. கலுஆரச்சி பி. நொ. ஆல் எழுதி உறுதிப் படுத்தப்பட்ட 1992.10.05 ஆந் திகதிய 389 ஆம் இலக்கமுடைய ஈட்டு இரத்துச் செய்தல் |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

எனது இல. : ஆர்ஜீ/என்பீ/11/2/39/2015/ஏடு. தயாரித்தல்
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

8-350

---

## காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் (120 ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் இரண்டாவது நிரலில் குறிப்பிடப்படும் காணி மற்றும் மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கும் உறுதிகளுக்குரிய முதலாவது நிரலில் காணப்படும் தற்பொழுது சிதைவடைந்து அல்லது கிழிந்துபோயுள்ள காணியினை பதிவு செய்த

புத்தகம்/ஏடு மீண்டும் பூரணமாக தற்காலிகமாக தயாரிக்கப்பட்டுள்ளதனால் காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் (120 ஆம் அத்தியாயம்) 4 ஆவது பிரிவிற்கிணங்க இத்தால் அறிவிக்கின்றேன்.

2. 2015.08.21 ஆந் திகதி தொடக்கம் 2015.09.04 ஆந் திகதிவரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் எந்தவொரு நபருக்கும் மேற்குறிப்பிடப்பட்ட தற்காலிக ஏட்டினை கொழும்பு காணிப் பதிவகத்தில் பரிசீலனை செய்து பார்க்க முடியும்.

3. அத்தற்காலிக ஏட்டில் எதுவிதமான அல்லது அதன் குறிப்பில் அடங்கியுள்ள எந்தவொரு விடயம் தொடர்பாக எந்தவிதமான ஆட்சேபனையினை வெளிப்படுத்துவதற்கு விரும்பும் நபர் அல்லது ஏதாவது குறிப்பு அல்லது ஏதாவது குறிப்பினால் விடப்பட்டிருக்கும் விடயத்தினை சேர்ப்பதற்கு வேண்டுகோளினை சமர்ப்பிக்கும் நபர் அந்த ஆட்சேபனையினை அல்லது வேண்டுகோள் அடங்கிய கடிதத்தினை விபரத்துடனும் தெளிவாக அதனை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடனும் 2015.09.11 ஆந் திகதிக்கு முன்பதாக இங்கு கீழ் கையொப்பம் இட்டவருக்கு கிடைக்கக்கூடியதாக பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் சிதைவடைந்த ஏடுகள் பற்றிய விபரங்கள் | காணியின் விபரம் | பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரங்கள் |
| 1. கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு காணிப் பதிவகத்தில் வெல்ல பிரிவின் 65 ஆவது புத்தகத்தில் 284, 285 வது ஏடுகள். | மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தின் பல்லேபற்று சல்பிட்டி கோறளையில் வெள்ளவத்தை போஸ்வெல் இடத்தில் அமைந்துள்ள 'மஹவெள்ளவத்த' என்னும் வரிப் பணம் இலக்கம் 32 உடைய இடத்திற்கு வீ. எல். எல். சேனாரத்ன நில அளவையாளரினால் 1954.12.10 ஆந் திகதி அளவிட்டு தயாரிக்கப்பட்ட இலக்கம் 686 உடைய அளவீட்டின் பிரகாரம் லொட் 18ஏ இற்கான எல்லைகள் :-<br>வடக்கு : லொட் 10ஏ, 12பி மற்றும் 10பி;<br>கிழக்கு : லொட் 18பி ;<br>தெற்கு : போஸ்வெல் இடம் ;<br>மேற்கு : லொட் 17பி.<br><br>விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 21.50பே. | 1.ஜீ. ஏ. நிஸ்சங்க பி.நொ. ஆல் எழுதி உறுதிப் படுத்தப்பட்ட 1973.02.19 ஆந் திகதிய 19431ஆம் இலக்கமுடைய நன்கொடை உறுதி. |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

எனது இல. : ஆர்ஜீ/என்பி/11/2/45/2015/ஏடு. தயாரித்தல்
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

8-349

---

**2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இறப்பு பதிவு செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்**

தேசிய அனர்த்த பேரழிவிற்குள்ளான பிரதேச அறிவித்தல்

2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இறப்பு பதிவு செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் II ஆவது பகுதியில் 09 ஆவது பிரிவின் ஒழுங்குவிதிகளின் பிரகாரம், கீழ் குறிப்பிடப்படும் பிரதேச செயலக அதிகாரப் பிரதேசங்கள் 2013 ஆம் ஆண்டின் யூலை மாதத்தினுள் தீவின் கடற்கரை பிரதேசங்களில் நிலவிய அதிக மழை மற்றும் சுழற்காற்று காரணமாக பாதிப்புக்குள்ளான 'தேசிய அனர்த்த பிரதேசமாக' இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

1. கொழும்பு நிருவாக மாவட்டத்தில் இரத்மலானை, மொரட்டுவை மற்றும் தெஹிவளை பிரதேச செயலகப் பிரிவு
2. கம்பஹா நிருவாக மாவட்டத்தில் வத்தளை, ஜா-எல, கட்டான மற்றும் நீர்கொழும்பு பிரதேச செயலகப் பிரிவு

3. களுத்துறை நிருவாக மாவட்டத்தில் களுத்துறை, பேருவளை மற்றும் பாணந்துறை பிரதேச செயலகப் பிரிவு
4. காலி நிருவாக மாவட்டத்தில் பலபிட்டிய, ஹிக்கடுவை மற்றும் பெந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவு
5. மாத்தறை நிருவாக மாவட்டத்தில் வெலிகம, மாத்தறை, தெவிநுவர மற்றும் திக்வெல்ல பிரதேச செயலகப் பிரிவு
6. திருகோணமலை நிருவாக மாவட்டத்தில் நகரம் மற்றும் சூழலும் கிண்ணியா, மூதூர், குச்சவி மற்றும் வெருகல் பிரதேச செயலகப் பிரிவு
7. மன்னார் நிருவாக மாவட்டத்தில் மன்னார் நகரம் நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு பிரதேச செயலகப் பிரிவு

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, யூலை மாதம் 17 ஆந் திகதி.

8-355

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

2015, யூன் 26 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது.

"கொழும்பில் கன்கோ என்டபிறைசஸ் என்ற பெயர்மகுடத்தின் கீழும் குழுமத்தின் கீழும் தனியுரிமையாண்மையில் தொழில் கொண்டு நடாத்துகின்ற நீர்கொழும்பைச் சேர்ந்த (கடன்பெறுநரான) பத்மநாதன் பிரகாஷ் கண்ணா என்பவர், தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் சார்பில் (வங்கி) நிறைவேற்றப் பட்டதும் பிரசித்த நொத்தாரிசு எச். எம். ஜீ. திசாநாயக்க என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான 2013.09.27 ஆந் திகதிய 516 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்டு அடைமானம் வைக்கப்பட்டதும், இதற்கான அட்டவணையில் இன்னும் விபரமாக விவரிக்கப்பட்டதுமான ஆதனம் மற்றும் வளவுகளின் பிணைப்பொறுப்புக்கெதிராக வழங்கப்பட்ட கடன்கள்/நிதி வசதிகள் மீதான கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும்,

அத்துடன் 2015, மே 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக எழுபத்து நான்கு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து ஐநூற்றுநாற்பத் தொன்பது ரூபா இருபத்து நான்கு சதம் (ரூ. 74,39,549.24) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறி மீது வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியும் வந்துள்ளதாதலாலும்,

வங்கியின் பணிப்பாளர் சபையானது திருத்தப்பட்டவாறான இதனகத்துப் பின்னர் கூட்டாகப் பிரதான சட்டம் எனக் குறிப்பிடு செய்யப்படும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்பட்டு, சொல்லப்பட்ட எழுபத்து நான்கு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து ஐநூற்றுநாற்பத்தொன்பது ரூபா இருபத்து நான்கு சதம் (ரூ. 74,39,549.24) கொண்ட தொகையையும், அல்லது சொல்லப்பட்ட முறி மீது வருமதியான ஐம்பத்தேழு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா (ரூ. 57,50,000) கொண்ட கூட்டுமொத்தப் பிரதான தொகை மீது 2015, யூன் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்குப் பதினேழு தசம் ஏழு ஐந்து சதவீதத்திலான (17.75%) வட்டியையும், அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் சொல்லப்பட்ட முறி மீது செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும் அதன் பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப் பின்) அவற்றைக் கழித்து, பிரதான சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள், மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட முறி மூலம் சொல்லப் பட்ட கடன்கள்/நிதிவசதிகளுக்கான பிணைப் பொறுப்பாக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்ட ஆதனமும் வளவுக்கும் அவ்வாதனத்துக்கும் வளவுகளுக்குமான இறையிலி மற்றும் வேறு உரிமை, உரித்து மற்றும் அக்கறையுட்பட, உத்தரவுபெற்ற ஏலதாரான திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### மேலே குறிப்பீடு செய்யப்பட்ட ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் அளுத்குருவின் துணகஹ பத்துவில் நீர்கொழும்பின் மாநகர சபை எல்லைகளினுள் கட்டுவ இல. 75 - கிராமசேவை அலுவலர் பிரிவினுள்ளும் கம்பஹா பிரதேச செயலாளர் பிரிவினுள்ளும் கட்டுவவில் அமைந்துள்ளதும் கீனகாவத்தவின் அணித்தாயுள்ள காணித்துண்டங்கள் C1 மற்றும் D1 எனவழைக்கப்படும் காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. எட்கா டி சில்வா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1994.02.06 ஆந் திகதிய 2469 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1A எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : ரீ. வேபியன் பர்ணாந்துவின் காணி ; கிழக்கு : சொல்லப்பட்ட வரைபடத்தின் காணித்துண்டம் 1B; தெற்கு : ஏ. ஏ. க்லெமென்ட் பெரேராவின் மரபுரிமையாளர்களினது காணி மற்றும் ; மேற்கு : வீதி ஒதுக்கிடம் ; பரப்பளவில் இது, அதன் மீதுள்ள கட்டிடங்கள், மரங்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் ஏழு தசம் மூன்று ஐந்து பேர்ச்சு (0ஏ. 0றூ. 7.35பே.) கொண்டுள்ளதுடன் நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் E736/78 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட காணித்துண்டம் 1A அதே வரைபடத்தில் உட்பிரிவிடப்பட்டு தற்போதைய எல்லைகளும் பரப்பளவும் பின்வருமாறு விவரிக்கப்படுகின்றன.

மேற்கூறப்பட்ட கட்டுவவில் அமைந்துள்ளதும் மேற்கூறப்பட்ட கீனகாவத்தவின் அணித்தாயுள்ள காணித்துண்டங்கள் C1 மற்றும் D1 எனவழைக்கப்படும் காணியினதாய் மேற்கூறப்பட்ட 2469 ஆம் இலக்க வரைபடத்தில் (உட்பிரிவாகவுள்ள) காணித்துண்டம் 1A1A எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : ரீ. வேபியன் பர்ணாந்துவின் காணி ; கிழக்கு : காணித்துண்டம் 1B; தெற்கு : காணித்துண்டம் 1A1B மற்றும் ; மேற்கு : வீதி ஒதுக்கிடம்; பரப்பளவில் இது, அதன்மீதுள்ள கட்டிடங்கள், மரங்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் ஆறு தசம் ஐந்து பேர்ச்சு (0ஏ. 0றூ. 6.5பே.) கொண்டுள்ளதுடன் நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் E1105/40 இல் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

மேற்கூறப்பட்ட காணி, வளவுகள் மற்றும் கட்டிடங்களுடன் இணைந்துள்ள அசைவற்ற பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி, சாதனம், இணைப்புக்கள், பொருத்திகள் மற்றும் சேவைகள் எல்லாவற்றுடனும் அவை தனித்தனியாகவும் ஆனால் மின்சார வழங்கல் முறைமை, தொலைத்தொடர்பு முறைமை மற்றும் நீர்வழங்கல் முறைமை என்பவற்றுக்கு வரையறுக்கப்படாமலும்.

பணிப்பாளர்/பிரதான நிறைவேற்றலுவலர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

8-379

---

**டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கியின் பிஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2015, பெப்புருவரி 26 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"இருவரும் பத்தரமுல்லையைச் சேர்ந்த ஷாந்த ஆராச்சிகே பிரியந்த சுமித் ஜயசிங்க மற்றும் ஷாந்த ஆராச்சிகே ஜயசிங்க என்போர், (முன்னர் டீ. எவ். சீ. சீ. வங்கி எனவறியப்பட்ட) டீ. எவ். சீ.சீ.வங்கி பீஎல்சீ சார்பில் இரத்தினபுரியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டீ. எம். பி. சீ. குணதிலக்க அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, யூலை 04 ஆந் திகதிய 5629 ஆம், இலக்க ஈட்டுமுறி மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளை செலுத்துவதில் தவணை தவறியுள்ளதலாலும்,

2015, சனவரி 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக அறுபத்தேழு இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து முந்நூற்று முப்பத்துமூன்று ரூபா எண்பத்து நான்கு சதம் (ரூ. 67,74,333.84) கொண்ட தொகையும், 2015, பெப்புருவரி 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை நாற்பத்தேழு இலட்சத்து தொண்ணூற்றொன்பதாயிரத்து இருநூற்று பதினொரு ரூபா எழுபத்தொன்பது சதம் (ரூ. 47,99,211.79) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5% சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது வேலைநாளன்று மீளாயப்பட்ட சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு தசம் ஐந்து வீத (7.5%) வட்டியும், சொல்லப்பட்ட ஷாந்த ஆராச்சிகே பிரியந்த சுமித் ஜயசிங்க மற்றும் ஷாந்த ஆராச்சிகே ஜயசிங்க என்போரிடமிருந்து டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்,

டீ. எவ். சீ. சீ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்தவங்களின் கீழும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 5629 ஆம் இலக்க ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க டீ. எவ். சீ. சீ. வங்கி பீ. எல். சீ இனால் உறப்பட்ட, கீழே விபரிக்கப்படும் காணியையும் வளவுகளையும் அவற்றின் மீதுள்ள கட்டிடங்களையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவுத் தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து அறுபத்தேழு இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து முந்நூற்று முப்பத்துமூன்று ரூபா எண்பத்து நான்கு சதம் (ரூ. 67,74,333.84) கொண்ட தொகையையும், 2015, பெப்புருவரி 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை நாற்பத்தேழு இலட்சத்து தொண்ணூற்றொன்பதாயிரத்து இருநூற்று பதினொரு ரூபா எழுபத்தொன்பது சதம் (ரூ. 47,99,211.79) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5% சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது வேலைநாளன்று மீளாயப்பட்ட சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு தசம் ஐந்து வீத (7.5%) வட்டியையும், அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினையும் அறவிடுவதற்காக சொல்லப்பட்ட டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**5629 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், ஹேவாகம் கோறளையின் பள்ளே பத்துவில் கடுவெல பிரதேச சபை எல்லைகளினுள் தலங்கம தெற்கில் அமைந்துள்ளதும், சென்ட், தோமஸ் தோட்டம் எனவழைக்கப்படும் காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. ரீ. எம். நாணயக்கார என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1996.05.10 ஆந் திகதிய 1083ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 94 எனவடையாளமிடப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : காணித்துண்டம் 95 ; கிழக்கு: காணித்துண்டம் 86 ; தெற்கு : காணித்துண்டம் 93 மற்றும் ; மேற்கு : காணித்துண்டம் 108 ; பரப்பளவில் இது, அதன்மீதுள்ளவையும் அதனோடிணைந்துள்ளவையுமான வேறெல்லாவற்றுடனும் இருபது பேர்ச் (0ஏ. 0றூ. 20பே.)

கொண்டுள்ளதுடன்,ஹோமாகம மாவட்டக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

சொல்லப்பட்ட காணி, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. ஆர். ஆர். பீ. ஜயசூரிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005.05.08 ஆந் திகதிய 1988 ஆம் இலக்க வரைபடத்தின்படி இப்போது பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது :-

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், ஹோவாகம் கோறளையின் பள்ளே பத்துவில் கடுவெல பிரதேச சபை எல்லைகளினுள் தலங்கம தெற்கில் அமைந்துள்ளதும், விக்ரமசிங்கபுர 1 ஆவது ஒழுங்கை, 22/ 1A, 22/ 1A1 மற்றும் 22/ 2 ஆம் வரிமதிப்பீட்டிலக்கங்களைக் கொண்ட கட்டிடங்களுடன் சென்ட், தோமஸ் தோட்டம் எனவழைக்கப்படும் காணியினதாய் மேற்கூறப்பட்ட 1988 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 94A எனவடையாளமிடப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு: எம்.ஏ. மில்லகஸ்தென்னவின் காணி (1083 ஆம் வரைபடத்தில் காணித்துண்டம் 95) ; கிழக்கு: யூ. ஆர்.சேரசிங்கவின் காணி (1083ஆம் வரைபடத்தில் காணித்துண்டம் 86), மற்றும் ; தெற்கில் : சீ. ஏ. சித்திரா மாலனியின் காணி (1083 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 93) ; பரப்பளவில் இது, அதன்மீதுள்ளவையும் அதனோடிணைந்துள்ளவையுமான வேறெல்லாவற்றுடனும் இருபது பேர்ச் (0ஏ. 0றூ. 20பே.) கொண்டுள்ளதுடன்,ஹோமாகம மாவட்டக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

ஏ. ஆர். பிரனாந்து,
பொது முகாமையாளர்.

டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீ,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

8-436

---

**டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீ**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கியின் பிஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2015, பெப்புருவரி 25 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"சிலாபத்தில் லெஸ்லி என்டர்பிறைசஸ் என்ற பெயர் மகுடத்தின் கீழும் குழுமத்தின் கீழும் பங்காண்மையில் தொழில் கொண்டு நடாத்துகின்ற பாலசூரிய முதியன்சலாகே ஜயதிலக்க, பாலசூரிய முதியன்சலாகே பேர்ட்டி ரணசிங்க மற்றும் சுந்தரப்பெரும முதியன்சலாகே பியசீலி என்போர், எல்லாம் (முன்னர் டீ. எவ். சீ. சீ. வங்கி எனவறியப்பட்ட) பீ. எல். சீ. வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு கே. டீ. ஏ. வீ. விஜேகோன் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011, சனவரி 06 ஆந் திகதிய 506 ஆம் இலக்க ஈட்டுமுறி மீதும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு கே. டீ. ஏ. வீ. விஜேகோன் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011, மே 10 ஆந் திகதிய 526 ஆம் இலக்க ஈட்டுமுறி மீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளை செலுத்துவதில் தவணை தவறியுள்ளனராதலாலும்,

2014, நவெம்பர் 30 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஒரு கோடியே அறுபது இலட்சத்து பதினோராயிரத்து தொளாயிரத்து அறுபத்துமூன்று ரூபா நாற்பத்தைந்து சதம் (ரூ. 1,60,11,963.45) கொண்ட தொகையும், 2014, திசெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை ஒரு கோடியே ஐம்பது இலட்சத்து பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று முப்பத்தொன்பது ரூபா எண்பத்தைந்து ரூபா எண்பத்தைந்து சதம் (ரூ. 1,50,19,839.85) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது வேலைநாளன்று மீளாயப்பட்ட சராசரி எடைவீதமளிக்கப்பட்ட வைப்பு வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு பத்து வீத (10.0%) வட்டியும், சொல்லப்பட்ட பாலசூரிய முதியன்சலாகே ஜயதிலக்க, பாலசூரிய முதியன்சலாகே பேர்ட்டி ரணசிங்க மற்றும் சுந்தரப்பெரும முதியன்சலாகே பியசீலி என்போரிடமிருந்து டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்,

டீ. எவ். சீ. சீ. வங்கி பீ. எல். சீயின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப் படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்தவங்களின் கீழும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 506 ஆம், 526 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீயினால் உறப்பட்ட, கீழே விபரிக்கப்படும் காணியையும் வளவுகளையும் அவற்றின் மீதுள்ள கட்டிடங்களையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவுத் தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து ஒரு கோடியே அறுபது இலட்சத்து பதினோராயிரத்து தொளாயிரத்து அறுபத்துமூன்று ரூபா நாற்பத்தைந்து சதம் (ரூ. 1,60,11,963.45) கொண்ட தொகையையும், 2014, திசெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை ஒரு கோடியே ஐம்பது இலட்சத்து பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று முப்பத்தொன்பது ரூபா எண்பத்தைந்து ரூபா எண்பத்தைந்து சதம் (ரூ. 1,50,19,839.85) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது வேலைநாளன்று மீளாயப்பட்ட சராசரி எடைவீதமளிக்கப்பட்ட வைப்பு வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு பத்து வீத (10.0%) வட்டியையும், அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினையும் அறவிடுவதற்காக மேற்கூறப்பட்ட 506 ஆம், 526 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் பாலசூரிய முதியன்சலாகே ஜயதிலக்க என்பவரினால் டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் அதன்மீதுள்ள வேறெல்லாமும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**506 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் வடக்கு பிட்டிகல் கோறளையின் யாகம் பத்துவில் தெமட்டபிட்டி கிராமத்தில் அமைந்துள்ளதும் அதன்மீதுள்ள கட்டிடங்கள், மற்றும் வேறெல்லாவற்றுடனும் தெமட்டபிட்டிகெலே எனவழைக்கப்படும் காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளையாளர் வேர்னன் பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட1998, நவெம்பர்14 ஆந் திகதிய 7649 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1 எனவடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட துமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : 7649 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 2 ; கிழக்கு : எம். ஜயமான் சில்வாவுக்குச் சொந்தமான காணி ; தெற்கு : சிலாபம் - குருநாகல் பிரதான வீதி மற்றும் ; மேற்கு : 7649 ஆம்இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 4 மற்றும் 15 அடி அகலமான வீதி ; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 7649 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஓர் ஏக்கர் (1ஏ. 0றூ. 0பே.) கொண்டுள்ளதுடன், சிலாபம் காணிப் பதிவகத்தில் பதவு செய்யப்பட்டுமுள்ளது.

**526 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

**ஆதனம் 1**:

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் வடக்கு பிட்டிகல் கோறளையின் யாகம் பத்துவில் மாதம்பே பிரதேச செயலகத்தில் ஹொரகெலே கிராமத்தில் அமைந்துள்ளதும், அதன்மீதுள்ள கட்டிடங்களுடனும், வேறெல்லாவற்றுடனும் பெலவத்த மறுபெயர் ஹொரகெலேவத்த (இப்போது ஹொரகெலே தோட்டம்) எனவழைக்கப்படுவதுமான காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். கே. மஞ்ஜு ஸ்ரீ பிரியங்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2011,ஏப்பிறல் 29 ஆந் திகதிய 1317 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக் காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1D என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1D பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : உ. நி., எம். கே. மஞ்ஜு ஸ்ரீ பிரியங்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2011.04.29 ஆந் திகதிய 1316 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1C, எம்.கே. மஞ்ஜு ஸ்ரீ பிரியங்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2009.12.31 ஆந் திகதிய 701A ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1A, எம்.கே. மஞ்ஜு ஸ்ரீ பிரியங்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2010.09.03 ஆந் திகதிய 1008 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1C (20 அடிஅகலமான வீதி), உ.நி., டபிள்யூ. ஏ. சிரிசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005.10.17 ஆந்திகதிய 3669A ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டங்கள் 9, 10, 11 ; கிழக்கு : உ.நி., டபிள்யூ. ஏ. சிரிசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005.10.17ஆந் திகதிய 3669A ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 100 ; தெற்கு : பிரதான வீதியிலிருந்தான வீதியும் எஸ். ஏ. டீ. சுசுமவதியினால் உரிமை கோரப்பட்ட காணியும் மற்றும் ; மேற்கு : சேன, ஜனக, மதுராவதி, சுனில் ஜயதிஸ்ஸ, அநுர, எஸ். எம்.சமந்த, சந்தியா என்போரினால் உரிமை கோரப்பட்ட காணிகள் ; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 1317 ஆம் இலக்க வரைபடத்தின்படி நான்கு ஏக்கர்கள் இருபத்தொன்பது தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (04ஏ. 0றூ. 29.5பே.) கொண்டுள்ளது.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம்.கே. மஞ்ஜு ஸ்ரீ பிரியங்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2011, ஏப்பிறல் 29 ஆந் திகதிய 1317 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1D எனவடையாளமிடப்பட்டதுமான மேற்கூறப்பட்ட காணித்துண்டு பின்வரும் காணித்துண்டிலிருந்து பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட வொரு பாகமாகும்.

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் வடக்கு பிட்டிகல் கோறளையின் யாகம் பத்துவில் மாதம்பே பிரதேச செயலகத்தில் ஹொரகெலே கிராமத்தில் அமைந்துள்ளதும், அதன்மீதுள்ள கட்டிடங்களுடனும், வேறெல்லாவற்றுடனும் பெலவத்த மறுபெயர் ஹொரகெலேவத்த (இப்போது ஹொரகெலே தோட்டம்) எனவழைக்கப்படுவதுமான காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். கே. மஞ்ஜு ஸ்ரீ பிரியங்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2010, ஏப்பிறல் 22 ஆந் திகதிய 834 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1B எனவடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1B பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : உ.நி., டபிள்யூ. ஏ. சிரிசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 3669A ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டங்கள் 1, 2, 3, 4, 5, எம். கே. மஞ்ஜு ஸ்ரீ பிரியங்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2009.12.31 ஆந் திகதிய 701A ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1A, உ.நி., டபிள்யூ. ஏ. சிரிசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005.10.17 ஆந் திகதிய 3669A ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 49 (20 அடிஅகலமான வீதி), உ.நி., டபிள்யூ. ஏ. சிரிசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 3669A ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டங்கள் 9, 10, 11 ; கிழக்கு : உ.நி., டபிள்யூ. ஏ. சிரிசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005.10.17 ஆந் திகதிய 3669A ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 100 ; தெற்கு : பிரதான வீதியிலிருந்தான வீதி மற்றும் எஸ். ஏ. டீ. சுசுமவதியினால் உரிமை கோரப்பட்ட காணி மற்றும் ; மேற்கு : சேன, ஜனக, மதுராவதி, சுனில் ஜயதிஸ்ஸ, அனுர, எஸ். எம். சமந்த, சந்தியா என்போரினால் உரிமைகோரப்பட்ட காணிகள்; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 834 ஆம் இலக்க வரைபடத்தின்படி நான்கு ஏக்கர்கள் ஒரு றூட் பதினேழு பேர்ச்சஸ்கள் (04ஏ. 1றூ. 17பே.) கொண்டுள்ளது.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம்.கே. மஞ்ஜு ஸ்ரீ பிரியங்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2010, ஏப்பிறல் 22 ஆந் திகதிய 834 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1B எனவடையாளமிடப்பட்டதுமான மேற்கூறப்பட்ட காணித்துண்டு பின்வரும் காணித்துண்டிலிருந்து பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட வொரு பாகமாகும்.

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் வடக்கு பிட்டிகல் கோறளையின் யாகம் பத்துவில் மாதம்பே பிரதேச செயலகத்தில் ஹொரகெலே கிராமத்தில் அமைந்துள்ளதும், அதன்மீதுள்ள கட்டிடங்களுடனும், வேறெல்லாவற்றுடனும் பெலவத்த மறுபெயர் ஹொரகெலேவத்த (இப்போது ஹொரகெலே தோட்டம்) எனவழைக்கப்படுவதுமான காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. சிரிசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2007, ஓகத்து 11 ஆந் திகதிய 3669D ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1 எனவடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : உ.நி., டபிள்யூ. ஏ. சிரிசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 3669A ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டங்கள் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 மற்றும் 11 ; கிழக்கு : உ.நி., டபிள்யூ. ஏ. சிரிசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005.10.17 ஆந் திகதிய 3669A ஆம் இலக்க வரைபடத்தில்

காணித்துண்டம் 100 ; தெற்கு : பிரதான வீதியிலிருந்தான வீதி மற்றும் எஸ். ஏ. டீ. சுசுமவதியினால் உரிமைகோரப்பட்ட காணி மற்றும் ; மேற்கு: சேன, ஜனக, மதுராவதி, சுனில் ஜயதிஸ்ஸ, அனுர, எஸ். எம். சமந்த, சந்தியா என்போரினால் உரிமைகோரப்பட்ட காணிகள்; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 3669D ஆம் இலக்க வரைபடத்தின்படி நான்கு ஏக்கர்கள் ஒரு றூட் முப்பது பேர்ச்சஸ்கள் (04ஏ. 1றூ. 30பே.) கொண்டுள்ளதுடன் சிலாபம் காணிப் பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டு முள்ளது.

பின்வருவனவற்றிலும் அவற்றின் மீதும் அத்துடன்/அல்லது அவை நெடுகிலும் முதலாவது ஈடுவைப்பவர், அவரது வருகையாளர்கள், பொறியியலாளர்கள், ஒப்பந்தக்காரர்கள், கட்டிடக் கலைஞர்கள், வேலையாட்கள், சேவையாளர்கள், வாடகைக்குடியிருப்பாளர்கள், உரிமம் பெற்றவர்கள் மற்றும் அதிதிகள், இதன்பின்னர் எல்லா நேரங்களிலும் அவர்களின் விருப்பத்தின் பேரில் எத்தகையனவுமான எல்லா நோக்கங்களுக்காகவும் பகலில் அல்லது இரவில் அதனோடு வழமையாக வைத்திருக்கப்பட்ட, பயன்படுத்தப்பட்ட அல்லது வேறுவகையாகத் துய்க்கப்பட்ட எல்லா மற்றும் தனித்தனியான உரிமைகள், வழிகள், அனுகூலங்கள் மற்றும் இணைந்துள்ளவையுடன் சேர்த்து இதன் கீழ் குறிப்பாக விவரிக்கப்பட்ட வீதிவழியில் அல்லது அது நெடுகிலும் அல்லது அதன்மீது பாரமேற்றப்பட்ட அல்லது ஏற்றப்படாத குதிரைகள், கால்நடைகள் அல்லது வேறு விலங்குகள், மோட்டார் கார்கள், மோட்டார் லொறிகள் மற்றும் வேறு ஒவ்வொரு வகையினவையுமான வாகனங்களுடனோ அவையின்றியோ நடந்துசெல்வதன் மூலம் அல்லது எத்தகையதுமான வேறுவகையாகச் செல்வதற்கும், திரும்பி வருவதற்கும், கடந்து செல்வதற்கும், மீளக் கடந்துசெல்வதற்கும், இடையறாத உட்செல்கை, வெளிச்செல்கை மற்றும் பின்னடைவு வழியும் செல்வழியும் என்பதற்கு முழுமையானதும் கட்டற்றதுமான உரிமையும் சுதந்திரமும் அனுமதியும் மற்றும் மின்சார வடங்கள், மேந்தலைக் கம்பிகள் வடிகாலமைப்பு, வாயு, நீர்க்குழாய்கள், உபகரணங்கள் மற்றும் எத்தகைய வகையினவையுமான வேறு உபாயங்களை இடுவதற்கான முழுமையானதும் கட்டற்றதுமான உரிமையும் சுதந்திரமும்-

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் பிட்டிகல் கோறளையின் யாகம் பத்துவில் மாதம்பே பிரதேச செயலகத்தில் ஹொரகெலே கிராமத்தில் அமைந்துள்ளதும், பெலவத்த மறுபெயர் ஹொரகெலேவத்த (இப்போது ஹொரகெலே தோட்டம்) (20 அடி அகலமான வீதி) எனவழைக்கப்படுவதுமான காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். கே. மஞ்ஜு ஸ்ரீ பிரியங்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2010, செத்தெம்பர் 03 ஆந் திகதிய 1008 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1C எனவடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1C பின்வரும் எல்லைகளையுடையது- வடக்கு : மாதம்பேக்கும் குளியாப்பிட்டிக்கும் இடையேயான பிரதான வீதி ; கிழக்கு : உ.நி., டபிள்யூ. ஏ. சிரிசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005.10.17 ஆந் திகதிய 3669A ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 9 ; தெற்கு : உ.நி., எம். கே. எம். எஸ். பிரியங்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 834 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1B மற்றும் ; மேற்கு : உ.நி., டபிள்யூ. ஏ. சிரிசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 3669A ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 7 ; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 1008 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒன்பது பேர்ச்சஸ்கள் (00ஏ. 0றூ. 9பே.) கொண்டுள்ளதுடன், சிலாபம் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

**எந்திரத்தொகுதி**

| தொகை | | விவரணம் |
|---|---|---|
| 1 | 02 | தும்பு கலக்கும் பொறிகள் (40 குவி)<br>டீகோட் - பலோமா, சுதுவெல்ல, மாதம்பே |
| 2 | 01 | தென்னை மற்றும் ஹஸ்க் நசுக்கி<br>LD 1511 (10 குவி)<br>பலோமா, சுதுவெல்ல, மாதம்பே |
| 3 | 02 | சுழற் பொறிகள் (அசைவுள்ளவை) |
| 4 | 01 | MGB - 99 தொடர் கம்பக்ட் குரோ பாக் பொறி<br>ஸ்லப் அளவு : குறைந்த பட்சம் 60 செமீ - அதிகபட்சம் 120 செமீ.<br>மோட்டார் : 3 குவி/3 பேஸ்<br>கொள்ளளவு : ஒரு மணித்தியாலத்துக்கு 110 முதல் 130 ஸ்லப்புகள் |
| 5 | 02 | 25 கிகி பகர் பொறி<br>பேல் அளவு : 44 செமீ X 32 செமீ X (76 செமீ - 82செமீ)<br>மோட்டார் : 20 குவி<br>கொள்ளளவு : எட்டு மணித்தியாலத்துக்கு 200 முதல் 250 ஸ்லப்புகள் |
| 6 | 01 | MGB - 79 தொடர் கம்பக்ட் 5 கிகி பலின் பொறி<br>பேல் அளவு : 30 செமீ X 30 செமீ X 15 செமீ<br>மோட்டார் : 30 குவி<br>கொள்ளளவு : ஒரு மணித்தியாலத்துக்கு 110 முதல் 130 ஸ்லப்புகள் |

**ஆதனம் 2:**

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் வடக்கு பிட்டிகல் கோறளையின் யாகம் பத்துவில் தெமட்டபிட்டி கிராமத்தில் அமைந்துள்ளதும், அதன்மீதுள்ள கட்டிடங்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் தெமட்டபிட்டியகெலே எனவழைக்கப்படும் காணியினதாய் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் வேர்னன் பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1998, நவெம்பர் 14 ஆந் திகதிய 7649 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1 எனவடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு: 7649 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 2 ; கிழக்கு : எம். ஜயமான் சில்வாவுக்குச் சொந்தமான காணி ; தெற்கு : சிலாபம் - குருநாகல் பிரதான வீதி மற்றும் ; மேற்கு : 7649 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 4 மற்றும் 15 அடி அகலமான வீதி ; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 7649 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒரு ஏக்கர் (01ஏ. 0றூ. 0பே.) கொண்டுள்ளதுடன், சிலாபம் காணிப் பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

ஏ. ஆர். பிரனாந்து,
பொது முகாமையாளர்.

டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீ,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

8-435

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.